**ஜூன் – 09**

# TNPSC துளிகள்

- கழிவுச் சேகரிப்பு நிறுவனங்கள் முதல் கழிவுச் சுத்திகரிப்பு வரையிலான மிகவும் ஒரு முழுமையான நெகிழிக் கழிவு மேலாண்மையின் சூழல் அமைப்பைக் கண்காணிக்க என்று தேசிய நெகிழிக் கழிவு அறிக்கையிடல் இணைய தளமானது தொடங்கப் பட்டு உள்ளது.
- நாடு முழுவதும் 10 கோடி மரங்களை நடுவதை இலக்காகக் கொண்ட 'ஏக் பெட் மா கே நாம் 2.0' எனப் படும் நாடு தழுவிய மரம் நடும் பிரச்சாரத்தின் இரண்டாம் கட்டத்தினை இந்தியப் பிரதமர் தொடங்கினார்.
- இந்தியா மற்றும் கிர்கிஸ்தான் ஆகிய நாடுகள் இருதரப்பு முதலீட்டு ஒப்பந்தத்தின் (BIT) ஒப்புதலுக்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.
    - 2000 ஆம் ஆண்டு மே 12 ஆம் தேதியன்று அமல்படுத்தப்பட்ட இதன் முந்தைய ஒப்பந்தத்திற்கு மாற்றாக அமையும் இந்தப் புதிய ஒப்பந்தமானது இந்த இரு நாடுகளுக்கும் இடையிலான முதலீடுகளின் பாதுகாப்பில் தொடர்ச்சியை உறுதி செய்கிறது.
- முதல் முறையாக, காஷ்மீர் பள்ளத்தாக்குப் பகுதியில் விளைந்த 24 டன் அளவிலான செர்ரி பழங்கள் கத்ராவிலிருந்து (ஜம்மு) மும்பைக்கு இரயில் மூலம் அனுப்பப்பட்டன.
- எலோன் மஸ்க், X செயலியில் (முன்னர் ட்விட்டர்) XChat எனப்படும் புதுப்பிக்கப்பட்ட நேரடிச் செய்தி (DM) அனுப்புதல் இடைமுகத்தினை அறிமுகப் படுத்தியுள்ளார்.
- அனைத்து வகையான சேமிப்பு வங்கிக் கணக்குகளுக்கும் சராசரி மாதாந்திர இருப்பு (AMB) தேவையை முழுமையாக தள்ளுபடி செய்வதாக அறிவித்த முதல் பெரிய பொதுத் துறை வங்கியாக கனரா வங்கி உருவெடுத்துள்ளது.
- ரஷ்ய மொழி தினமானது, சிறந்த ரஷ்யக் கவிஞராகவும், நவீன ரஷ்ய இலக்கியத்தின் நிறுவனராகவும் கருதப்படும் அலெக்சாண்டர் செர்ஜியேவிச் புஷ்கின் பிறந்த நாளான ஜூன் 06 ஆம் தேதியன்று கொண்டாடப் படுகிறது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## மாநில நுகர்வோர் பாதுகாப்பு சபை 2025

- தமிழ்நாடு அரசானது, உணவு மற்றும் பொது விநியோகத் துறை அமைச்சரை அதன் தலைவராகக் கொண்டு மாநில நுகர்வோர் பாதுகாப்புச் சபையினை மறு சீரமைத்து உள்ளது.
- தேர்ந்தெடுக்கப்பட்டப் பிரதிநிதிகளான வேலூர் பாராளுமன்ற உறுப்பினர் (MP) D.M. கதிர் ஆனந்த், தஞ்சாவூர் MP S. முரசொலி, தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் (MLA) S.R. ராஜா மற்றும் விக்கிரவாண்டி MLA அன்னியூர் சிவா உள்ளிட்ட 22 உறுப்பினர்கள் இக்குழுவில் உள்ளனர்.
- இந்தக் குழுவில் உள்ள மற்ற உறுப்பினர்கள்
    - கூட்டுறவுத் துறை செயலாளர்,
    - உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை செயலாளர்,
    - பொது விநியோக மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையர்,
    - மாநில நுகர்வோர் குறை தீர்ப்பு ஆணையப் பதிவாளர்,

- தமிழ்நாடு உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழக லிமிடெட் நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர்.




## கலைஞர் மு. கருணாநிதி செம்மொழி தமிழ் விருது 2025




- ❖ தமிழக முதல்வர் 2025 ஆம் ஆண்டிற்கான கலைஞர் மு. கருணாநிதி செம்மொழி தமிழ் விருதைப் பிரபல தமிழ் அறிஞர் தாயம்மாள் அரவாணனுக்கு வழங்கினார்.
- ❖ முதல்வர் இதில் செவ்வியல் தமிழ் நிறுவனத்தால் வெளியிடப்பட்ட பின்வரும் இரண்டு படைப்புகளையும் வெளியிட்டுள்ளார்.

- ராஜேந்திரன் சங்கரவேலாயுதனின் தமிழ் வினை அடிகள் - வரலாற்று மொழியியல் ஆய்வு மற்றும்
- P.R. சுப்பிரமணியனின் சங்க இலக்கியச் சொல்வளம்

# தேசியச் செய்திகள்

## சௌாப் இரயில் பாலத்தின் திறப்பு விழா




- ஜம்மு & காஷ்மீரில் அமைக்கப்பட்டுள்ள உலகின் மிக உயரமான இரயில் பாலமான செனாப் இரயில் பாலத்தினைப் பிரதமர் திறந்து வைத்தார்.
- இந்தியாவின் முதல் கம்பிவட தாங்கு இரயில் பாலமான அஞ்சி பாலத்தையும் அவர் திறந்து வைத்தார்.
- இந்த செனாப் பாலம் ஆனது ஆற்றுப் படுகையிலிருந்து 359 மீட்டர் உயரத்திலும், ஈபிள் கோபுரத்தை விட 35 மீட்டர் உயரத்திலும் உள்ளது.
- இந்த இரயில் திட்டத்திற்கு, 1995 ஆம் ஆண்டில் நரசிம்ம ராவ் பிரதமராக இருந்தபோது அனுமதி அளிக்கப்பட்டது.
- 2002 ஆம் ஆண்டில், அடல் பிஹாரி வாஜ்பாய் இத்திட்டத்தினை ஒரு தேசிய திட்டமாக அறிவித்தார்.
- உதம்பூர், ஸ்ரீநகர் மற்றும் பாரமுல்லா இடையேயான 272 கிலோமீட்டர் நீளத்தில், 160 கிலோ மீட்டர் தூரமானது ஏற்கனவே 2014 ஆம் ஆண்டிற்கு முன்பே திறக்கப்பட்டது.
- அஞ்சி பாலம் ஆனது ஒரு இமாலயப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள இந்தியாவின் முதல் கம்பி வடந்தாங்கு இரயில் பாலமாக உள்ளது.
- இது உதம்பூர் ஸ்ரீநகர் பாரமுல்லா இரயில் பாதையின் கத்ரா-பனிஹால் பகுதியில் ஒரு முக்கிய இணைப்பை நிறுவுகிறது.
- இந்தத் திட்டத்தினை இந்திய இரயில்வே நிர்வாகத்தின் கொங்கன் இரயில்வே கழகம் மேற்கொண்டது.
- ஜம்மு காஷ்மீரில் உள்ள கத்ரா மற்றும் ஸ்ரீநகர் இடையேயான வந்தே பாரத் இரயில் சேவையையும் பிரதமர் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.
- காஷ்மீர் பள்ளத்தாக்குக்கும் ஜம்மு பிராந்தியத்திற்கும் இடையிலான முதல் இரயில் சேவை இணைப்பு இதுவாகும்.
- 272 கிலோ மீட்டர் நீளமுள்ள உதம்பூர்-ஸ்ரீநகர்-பாரமுல்லா இரயில் சேவை இணைப்பு (USBRL) திட்டத்தையும் பிரதமர் தொடங்கி வைத்தார்.


- USBRL ஆனது T50 எனப்படுகின்ற இந்தியாவின் மிக நீளமானப் போக்குவரத்து சுரங்கப் பாதையினைக் கொண்டுள்ளது என்பதோடு இது ஜம்மு மற்றும் காஷ்மீரில் உள்ள காரி மற்றும் சம்பர் இடையே 12.77 கிலோமீட்டர் நீளத்தில் அமைந்துள்ளது.


## தேர்தல் தரவுகளில் இந்தியத் தேர்தல் ஆணையத்தின் மேம்பாட்டு நடவடிக்கை

- இந்தியத் தேர்தல் ஆணையம் ஆனது, தொழில்நுட்பம் சார்ந்த குறியீட்டு அட்டைகளை உருவாக்குவதற்கான வழிமுறையை மேம்படுத்தியுள்ளது.
- இந்தக் குறியீட்டு அட்டை என்பது சட்டப் பூர்வமற்ற, தேர்தலுக்குப் பிந்தையப் புள்ளி விவர அறிக்கையிடல் வடிவமாகும்.
- அனைத்துப் பங்குதாரர்களுக்கும் தொகுதி அளவில் தேர்தல் தொடர்பான தரவுகளின் அணுகலை இது வழங்குகிறது.
- தானியக்கம் மற்றும் தரவு ஒருங்கிணைப்பை மேம்படுத்துவதன் மூலம், இந்தப் புதிய அமைப்பு விரைவான அறிக்கையிடலை உறுதி செய்கிறது.




## இந்தியாவில் பால் உற்பத்தி 2023/24




- இந்தியா 1998 ஆம் ஆண்டிலிருந்து பால் உற்பத்தியில் முதலிடத்தில் உள்ளது.
- தற்போது இந்தியா உலகின் பால் உற்பத்தியில் 25 சதவீதம் பங்களித்து வருகிறது.

- 2023-24 ஆம் ஆண்டில், ஒரு சராசரி இந்தியர் தினமும் 471 கிராமுக்கு மேலான அளவில் பாலினை பெறுகிறார் என்ற நிலையில் இது உலக சராசரியான 322 கிராமை விட மிக அதிகமாகும்.
- 2014-15 மற்றும் 2023-24 ஆகிய ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில், பால் உற்பத்தி 63.56% அதிகரித்து, 146.3 மில்லியன் டன்னிலிருந்து 239.2 மில்லியன் டன்னாக உயர்ந்தது.
- 2023-24 ஆம் ஆண்டில், உத்தரப் பிரதேசம் பால் உற்பத்தியில் முதலிடத்தில் இருந்தது.
- இது இந்தியாவின் மொத்தப் பால் உற்பத்தியில் 16.21 சதவீதத்தை பங்களித்தது.
- பால் உற்பத்தியில் மேற்கு வங்காளம் மிகவும் வேகமான வளர்ச்சியைப் பதிவு செய்து உள்ளது.
- 536.76 மில்லியன் என்ற மொத்தக் கால்நடைகள் எண்ணிக்கையுடன், உலகின் மிகப் பெரிய எண்ணிக்கையில் கால்நடைகளைக் கொண்ட நாடு என்ற சிறப்பை இந்தியா கொண்டுள்ளது.
- தற்போது இந்தியாவின் பால்வளத் துறையானது மிகப் பெரிய வேளாண் சார்ந்த ஒரு தொழிலாகும்.
- பால் உற்பத்தித் துறையானது தேசியப் பொருளாதாரத்தில் 5 சதவீதப் பங்குடன் 8 கோடிக்கும் மேற்பட்ட விவசாயிகளை நேரடியாக வேலைக்கு அமர்த்தியுள்ளது.

# சர்வதேசச் செய்திகள்

## 8வது GPDRR 2025




- 8வது உலகளாவியப் பேரிடர் அபாயக் குறைப்புக்கான தளம் (GPDRR-2025) நிகழ்வினை சுவிட்சர்லாந்தின் ஜெனீவாவில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் பேரிடர் அபாயக் குறைப்புக்கான அலுவலகம் (UNDRR) ஏற்பாடு செய்தது.
- ஆப்பிரிக்க ஒன்றியமானது சமீபத்தில் பேரிடர் மீள்தன்மை உள்கட்டமைப்புக்கான கூட்டணியில் (CDRI) 54வது உறுப்பினராக இணைந்தது.
- இந்த நிகழ்வின் போது, ஐ.நா. அமைப்பு மற்றும் பலதரப்பு நிதி நிறுவனங்களால் ஆதரிக்கப் படும் ஒரு உலகளாவிய மையத்தினை உருவாக்குவதற்கு இந்தியா ஒரு அழைப்பினை விடுத்தது.

- இது செயலூக்க நிதி, தொழில்நுட்ப உதவி மற்றும் அறிவுப் பரிமாற்றத்திற்கான ஒரு தளமாகப் பயன்படுத்தப்படலாம்.

## ECOWAS அமைப்பின் 50 ஆம் ஆண்டு நிறைவு விழா


- மேற்கு ஆப்பிரிக்க நாடுகளின் பொருளாதாரச் சமூகம் (ECOWAS) ஆனது அதன் 50 ஆம் ஆண்டு நிறைவை 2025 ஆம் ஆண்டு மே 28 ஆம் தேதியன்று கொண்டாடியது.
- லாகோஸ் என்ற ஒரு ஒப்பந்தமானது, 1975 ஆம் ஆண்டில் 15 மேற்கு ஆப்பிரிக்க நாட்டுத் தலைவர்கள் மற்றும் அரசாங்கங்களால் கையெழுத்திடப்பட்டது.
- இந்த ஒப்பந்தமானது அந்தப் பிராந்தியம் முழுவதும் பொருளாதார ஒருங்கிணைப்பை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் ECOWAS சமூகத்தினை நிறுவச் செய்வதற்கான அடித் தளத்தினை அமைத்தது.
- ECOWAS என்பது 15 மேற்கு ஆப்பிரிக்க நாடுகளைக் கொண்ட ஒரு பிராந்தியக் குழு ஆகும்.
- சமீபத்தில், நைஜர், மாலி மற்றும் புர்கினா பாசோ ஆகியவை இந்தக் குழுவிலிருந்து அதிகாரப் பூர்வமாக விலகின.
- மொரிட்டானியா 2000 ஆம் ஆண்டில் இக்குழுவில் இருந்து விலகியது, ஆனால் 2017 ஆம் ஆண்டு மீண்டும் அதன் இணை உறுப்பினராக இணைந்தது.




## 80வது ஐ.நா. பொதுச் சபை அமர்வு

- ஐ.நா. பொதுச் சபையின் (UNGA-80) 80வது அமர்வு ஆனது 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் 09ஆம் தேதியன்று தொடங்கவுள்ளது.
- 80வது ஐக்கிய நாடுகள் சபையின் (UNGA) தலைவராக ஜெர்மனி நாட்டின் முன்னாள் வெளியுறவு அமைச்சர் அன்னலெனா பேர்பாக் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- இதன் மூலம், இந்தப் பதவியை ஏற்ற மேற்கு ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த முதல் பெண்மணியாகவும், இதுவரை தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களுள் ஐந்தாவது பெண்மணி என்ற பெருமையை இவர் பெற உள்ளார்.
- இந்த ஐ.நா. பொதுச் சபைத் தலைவர் பதவி ஆனது ஆண்டுதோறும் ஐந்து பிராந்தியக்

குழுக்களிடையே சுழற்சி முறையில் தேர்ந்தெடுக்கப் படுகிறது.




# பொருளாதாரச் செய்திகள்

## 5 ஆண்டு முன்னெடுப்பு - ADB வங்கி




- ஆசிய மேம்பாட்டு வங்கி (ADB) ஆனது, இந்தியா முழுவதும் உள்ள நகர்ப்புற உள் கட்டமைப்பை மாற்றுவதற்காக என்று 10 பில்லியன் டாலர் மதிப்பீட்டிலான ஐந்தாண்டு முன்னெடுப்பை வெளியிட்டுள்ளது.
- ஒரு மூன்றாம் தரப்பு மூலதனமும் அடங்கிய இந்தத் தொகை, மெட்ரோ போக்குவரத்து சேவை விரிவாக்கம், புதிய பிராந்திய விரைவுப் போக்குவரத்து அமைப்பு வழித் தடங்கள் மற்றும் நகர்ப்புற உள்கட்டமைப்பு மற்றும் சேவைகளுக்குப் பயன்படுத்தப் படும்.
- நீர் வழங்கல், சுகாதாரம், வீட்டுவசதி மற்றும் திடக்கழிவு மேலாண்மை திட்டங்களில் 22 மாநிலங்களில் உள்ள சுமார் 110க்கும் மேற்பட்ட நகரங்களுடன் ADB ஏற்கனவே அது

தொடர்பான பணியில் ஈடுப்பட்டுள்ளது.

- ADB ஆனது, இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி இந்த ஆண்டு (2025-2026 ஆம் நிதியாண்டு) 6.7% ஆகவும், அடுத்த ஆண்டு (2026-2027 ஆம் நிதியாண்டு) 6.8% ஆகவும் இருக்கும் என்று எதிர்பார்க்கிறது.
- இது வளர்ந்து வரும் ஆசியப் பொருளாதாரங்களை விட 2 சதவீதப் புள்ளிகள் அதிகம் ஆகும்.
- 1966 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட ADB ஆனது, ஆசியப் பிராந்தியத்தினைச் சேர்ந்த 50 உறுப்பினர்களுடன் மொத்தமாக 69 உறுப்பினர்களைக் கொண்டது.
- இது 1986 ஆம் ஆண்டில் இந்தியாவில் அதன் செயல்பாடுகளைத் தொடங்கியது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## நுண்ணுயிர் எதிர்ப்பு உற்பத்தி செய்யும் வெப்ப நாட்ட பாக்டீரியாக்கள்




- வேலூர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தின் (VIT) அறிவியல் ஆராய்ச்சியாளர்கள் பீகார் மாநிலத்தின் நாளந்தாவில் உள்ள இராஜ்கிர் வெப்ப நீரூற்றை ஆய்வு செய்து வெப்ப நாட்ட ஆக்டினோபாக்டீரியாவைக் கண்டறிந்துள்ளனர்.
- இந்த ஆக்டினோபாக்டீரியாக்கள் பல நோய்களை உண்டாக்கும் பல்வேறு நோய்க் கிருமிகளுக்கு எதிராக செயல்படும் நுண்ணுயிர் எதிர்ப்புச் சேர்மங்களை மிக நன்கு உருவாக்குகின்றன.
- வெப்ப நாட்டப் பாக்டீரியாக்கள் என்பவை சுமார் 45°C முதல் 70°C வரையிலான வெப்ப நிலையில் செழித்து வளரும் பாக்டீரியாக்கள் ஆகும்.
- ஆக்டினோபாக்டீரியாக்கள் என்பது கிராம்-பாசிட்டிவ் பாக்டீரியாக்களின் ஒரு குழு ஆகும் என்பதோடு அவை ஸ்ட்ரெப்டோமைசின் மற்றும் டெட்ராசைக்ளின் போன்ற சில நுண்ணுயிர் எதிர்ப்பிகளை உற்பத்தி செய்வதில் பெயர் பெற்றவை.

- வெப்பத்தை விரும்பும் சில ஆக்டினோபாக்டீரியாக்கள், வெப்ப நீரூற்றுகள் போன்ற வெப்பமானச் சூழல்களில் உயிர் வாழ்கின்றன.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## புதிய ராம்சர் தளங்கள் – ஜூன் 2025




- பலோடியில் உள்ள கிச்சான் மற்றும் உதய்பூரில் உள்ள மேனார் ஆகியவை சமீபத்தில் ராம்சர் தளங்களாக நியமிக்கப்பட்டுள்ளன.
- இதன் மூலம் இந்தியாவின் ராம்சர் தளங்களின் எண்ணிக்கை 91 ஆக உயர்ந்துள்ளது.
- கிச்சான் ஈரநிலம் ஆனது வடக்கு தார் பாலைவனத்தில் அமைந்துள்ளது.
- இது ராத்ரி நதி (நதி) மற்றும் விஜய்சாகர் தலாப் (குளம்) ஆகிய இரண்டு நீர்நிலைகள், ஆற்றங்கரை வாழ்விடங்கள் மற்றும் புதர் நிலம் ஆகியவற்றைக் கொண்டுள்ளது.
- மேனார் ஈரநிலமானது ஒரு நன்னீர் பருவமழை சார் ஈரநிலப் பகுதியாகும்.
- இது பிரஹாம் தலாப், தந்த் தலாப் மற்றும் கெரோடா தலாப் ஆகிய மூன்று குளங்கள் மூலம் உருவாக்கப்பட்டது.
- ராம்சார் உடன்படிக்கை என்பது 1971 ஆம் ஆண்டு ஈரான் நாட்டின் ராம்சாரில் கையெழுத்திடப் பட்ட ஓர் அரசுகளுக்கிடையேயான ஒப்பந்தமாகும்.

## டிரால் வனவிலங்கு சரணாலயத்தின் சுற்றுச்சூழல் தாங்கு மண்டலம்


- மத்திய அரசானது, டிரால் வனவிலங்கு சரணாலயத்தைச் சுற்றி ஒரு சுற்றுச்சூழல் தாங்கு மண்டலத்தை (ESZ) அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது.
- நாட்டில் மீதமுள்ள ஹங்குல் இனத்திற்கு டிரால் வனவிலங்கு சரணாலயம் ஒரு முக்கிய வழித்தடமாகச் செயல்படுகிறது.
- இந்த அறிவிப்பைத் தொடர்ந்து, அரசாங்கம் தற்போது ஓர் இடையக மண்டலத்தை உருவாக்கி அப்பகுதியின் நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்த இயலும்.

- டிரால் வனவிலங்கு சரணாலயமானது ஜம்மு-காஷ்மீரின் புல்வாமா மாவட்டத்தில் அமைந்துள்ளது.
- இந்த சரணாலயம் ஓவேரா-அரு வனவிலங்கு சரணாலயம் மற்றும் க்ரூ வளங்காப்பகம் ஆகியவற்றுடன் இணைக்கப்பட்டுள்ளது.
- ஹங்குல் ஆனது காஷ்மீர் மற்றும் அதன் அண்டைப் பகுதிகளை ஒரு பூர்வீகமாகக் கொண்ட மத்திய ஆசிய சிவப்பு மான்களின் ஒரு கிளையினமாகும்.
- இது IUCN அமைப்பின் செந்நிறப் பட்டியலில் மிகவும் அருகி வரும் ஒரு இனமாகப் பட்டியலிடப் பட்டுள்ளது.




## அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

### 2024 ஆம் ஆண்டிற்கான உலகின் முன்னணி கடன் வழங்குநர்





- சுமார் 34 ஆண்டுகளுக்குப் பிறகு, ஜெர்மனி நாடானது ஜப்பான் வகித்த முதலிடத்தைப் பிடித்து, 3.9 டிரில்லியன் டாலர் மதிப்புள்ள சொத்துக்களுடன் உலகின் முன்னணி கடன் வழங்குநர் நாடாக மாறியுள்ளது.
- 1991 ஆம் ஆண்டில் ஜெர்மனியை விஞ்சியதிலிருந்து ஜப்பான் (3.7 டிரில்லியன் டாலர்)

முதலிடத்தில் உள்ளது.

- ❖ சீனா 516.3 டிரில்லியன் யுவான் நிகரச் சொத்துக்களுடன் மூன்றாவது இடத்தைத் தக்க வைத்துள்ளது.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## ஓய்வு பெற்ற நீதிபதி M.S.ஜனார்த்தனம்





- ❖ ஓய்வு பெற்ற சென்னை உயர் நீதிமன்ற நீதிபதியும், மாநிலப் பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் முன்னாள் தலைவருமான நீதிபதி M.S. ஜனார்த்தனம் காலமானார்.
- ❖ இவர் 1988 முதல் 1998 ஆம் ஆண்டு வரை சென்னை உயர் நீதிமன்ற நீதிபதியாகப் பணி ஆற்றினார்.
- ❖ 2006 முதல் 2015 ஆம் ஆண்டு வரை மாநிலப் பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் தலைவராகவும் பணியாற்றினார்.
- ❖ அவரது பரிந்துரைகளின் அடிப்படையில் மட்டுமே தான் தமிழ்நாட்டில் முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் மற்றும் அருந்ததியர்களுக்கான இடஒதுக்கீடு அமல்படுத்தப்பட்டது.
- ❖ 2010 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில், உச்ச நீதிமன்றம் ஆனது, BC, MBC மற்றும் SC/ST பிரிவினர்களுக்கான 69% இடஒதுக்கீட்டைத் தொடரச் செய்வதற்கான அளவிடக்கூடிய தரவுகளுடன் நியாயப்படுத்தலை வெளியிட என்று தமிழக அரசிற்கு ஓராண்டு கால அவகாசம் வழங்கியது.
- ❖ மாநில BC ஆணையத்தின் தலைவராக இருந்த நீதிபதியான ஜனார்த்தனம், 1994 ஆம் ஆண்டின் தமிழ்நாடு சட்டம் 45ல் வழங்கப்பட்டுள்ளபடி, இட ஒதுக்கீட்டுத் திட்டத்தை ஆதரித்து ஓர் அறிக்கையை எழுதியிருந்தார்.
- ❖ 2008 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில், ஒரு குழுவின் தலைவராக இருந்த அவர், இந்த மாநிலத்தின் கீழ் உள்ள குரூப் A, B மற்றும் C பணிகளில் அருந்ததியர்களின்

பிரதிநிதித்துவம் "மிகவும் போதுமானதாக இல்லை" என்று அப்போதைய திமுக மாநில அரசாங்கத்திற்கு ஓர் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

- இதன் விளைவாக, மூன்று சதவீத இடஒதுக்கீடு நடைமுறைக்கு வந்தது.
- 2012 ஆம் ஆண்டில், 20 சதவீத ஒதுக்கீட்டிற்குள் வன்னியர்களுக்கு என 10.5% உள் இட ஒதுக்கீடு வழங்குவதற்காக அவர் அரசாங்கத்திற்கு ஒரு கருத்தினை வழங்கினார்.
- ஒன்பது ஆண்டுகளுக்குப் பிறகு முந்தைய அதிமுக ஆட்சியால் இது செயல்படுத்தப் பட்டாலும், 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் உச்ச நீதிமன்றம் இந்த நடவடிக்கையை ரத்து செய்தது.

## ஐக்கிய நாடுகள் சபையின் வாழ்விடம் குறித்த மாநாடு 2025




- ஐக்கிய நாடுகள் சபையின் வாழ்விடம் குறித்த மாநாட்டின் இரண்டாவது அமர்வு ஆனது கென்யாவின் நைரோபியில் நடைபெற்றது.
- இது ஐக்கிய நாடுகள் சபையின் 193 உறுப்பினர் நாடுகளைக் கொண்ட நிலையான நகரமயமாக்கல் மற்றும் மனித குடியேற்றங்கள் குறித்த முடிவெடுக்கும் அதிகாரம் கொண்ட உலகளாவிய மிக உயரிய அமைப்பாகும்.
- இந்த சபையானது ஐக்கிய நாடுகள் சபையின் 2026–2029 ஆம் ஆண்டிற்கான வாழ்விட உத்திசார் திட்டத்தினை ஏற்றுக் கொண்டது.
- இந்தத் திட்டமானது, நகரங்கள் மற்றும் சமூகங்களை உள்ளடக்கிய வகையிலான, பருவநிலை நெகிழ்திறன் கொண்ட மற்றும் மிகவும் சமமான வளர்ச்சியை விரைவு படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது குறிப்பாக பருவநிலை மாற்றம், மோதல் மற்றும் சமத்துவமின்மையால் பாதிக்கப் பட்ட நாடுகளில் கவனம் செலுத்தும்.
- மலேசியாவானது, 2025-2029 ஆம் ஆண்டிற்கான ஐ.நா. மனிதக் குடியேற்றத் திட்டத்தின் (UN-Habitat) பொதுச் சபையின் தலைமையாக அதிகாரப் பூர்வமாக தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது.

- மலேசியாவின் தலைமைப் பதவியை இதன் 193 உறுப்பினர் நாடுகளும் ஒருமனதாக அங்கீகரித்த போது அது புதிய வரலாற்றினைப் படைத்தது.
- இந்தக் காலகட்டத்தில், ஆசியா பசிபிக் பிராந்தியத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தச் செய்வதற்காக மலேசியா தலைமைப் பதவியையும், ஐக்கிய அரபு அமீரகத்துடன் இணைந்து நிர்வாகக் குழுவில் ஒரு இடத்தையும் வகிக்கும்.
- ஐக்கிய நாடுகள் சபையின் வாழ்விடம் குறித்த மாநாடானது நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை கூடுகிறது.
- உலக நகர்ப்புற மன்றம் 13 (WUF13) ஆனது அஜர்பைஜானின் பாகுவில் "Housing the world: Safe and resilient cities and communities" என்ற ஒரு கருத்துருவின் கீழ் 2026 ஆம் ஆண்டில் நடைபெறவுள்ளது.

## ஷாங்க்ரி-லா பேச்சுவார்த்தை 2025




- இந்தியாவின் தலைமைத் தளபதி (CDS) ஜெனரல் அனில் சௌகான் சிங்கப்பூரில் நடைபெற்ற 22வது ஷாங்க்ரி-லா பேச்சுவார்த்தையில் பங்கேற்றார்.
- இது சர்வதேச உத்திசார் ஆய்வுகளுக்கான நிறுவனத்தால் ஆண்டுதோறும் நடத்தப் படுகிறது.
- ஷாங்க்ரி-லா பேச்சுவார்த்தை என்பது பாதுகாப்புத் துறை அமைச்சர்கள், இராணுவத் தலைவர்கள், கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் உலகெங்கிலும் உள்ள உத்திசார் நிபுணர்களை ஒன்றிணைக்கின்ற ஆசியாவின் முதன்மையான இராணுவம் மற்றும் பாதுகாப்பு உச்சிமாநாடாகும்.
- இந்த நிகழ்வில் 40க்கும் மேற்பட்ட நாடுகளின் தலைவர்கள் இந்திய-பசிபிக் பகுதியில் நிலவும் பாதுகாப்புச் சவால்கள் குறித்து வாதத்தினை முன்வைத்தனர்.

# முக்கிய தினங்கள்

## உலக சுற்றுச்சூழல் தினம் 2025 - ஜூன் 05


- இது சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்கான விழிப்புணர்வையும், நடவடிக்கையையும் ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தத் தினமானது, 1972 ஆம் ஆண்டு ஸ்டாக்ஹோமில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் மனித சுற்றுச்சூழல் குறித்த மாநாட்டின் போது நிறுவப்பட்டது.

- 1973 ஆம் ஆண்டு, "Only one earth" என்ற கருத்துருவுடன் முதல் உலக சுற்றுச்சூழல் தினம் அனுசரிக்கப்பட்டது.
- 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Putting an End to Plastic Pollution" என்பது ஆகும்.




## இதரச் செய்திகள்


### இந்தியாவின் AI புரட்சி: விக்சித் பாரதத் திட்டத்திற்கான செயல் திட்டம்




- மத்திய மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சகமானது, 'இந்தியாவின் செயற்கை நுண்ணறிவுப் புரட்சி: விக்சித் பாரதத்திற்கான ஒரு செயல் திட்டம்' என்ற அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- செயற்கை நுண்ணறிவு (AI) நிபுணர்களுக்கான தேவையில் மிகப்பெரிய எழுச்சியை இந்தியா எதிர்கொள்ளத் தயாராக உள்ளது.
- 2026 ஆம் ஆண்டிற்குள் 1 மில்லியன் திறம் பெற்ற நபர்களுக்கான தேவை ஏற்படும் என கணிப்புகள் மதிப்பிடுகின்றன.

- 2047 ஆம் ஆண்டிற்குள் சுமார் 35 டிரில்லியன் அமெரிக்க டாலர்கள் மதிப்பிலான ஒரு பொருளாதாரமாக மாற நாடு முயன்று வருகிறது.
- AICTE தரவுகளின்படி, 2024-25 ஆம் கல்வியாண்டிற்கான அங்கீகரிக்கப்பட்ட B.Tech கல்வி இடங்களின் எண்ணிக்கை 14.9 லட்சமாக உயர்ந்துள்ளது என்பது நான்கு ஆண்டுகளில் இது சுமார் 16 சதவீதம் அதிகரிப்பு ஆகும்.
- வீபாக்ஸ் என்ற நிறுவனத்தின் 2024 ஆம் ஆண்டு இந்தியத் திறன்கள் அறிக்கை ஆனது, இந்தியாவின் செயற்கை நுண்ணறிவு துறை 2025 ஆம் ஆண்டிற்குள் 28.8 பில்லியன் அமெரிக்க டாலர்களை எட்டும் என்று கணித்துள்ளது.

## கட்டிடங்களுடன் இணைந்த சூரிய ஒளி ஆற்றல் உற்பத்தி தகடுகள்




- 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திய நிலவரப்படி, இந்தியா மேற்கூரைசார் சூரிய சக்தி உற்பத்தி அமைப்புகளில் 17 ஜிகா வாட்டிற்கும் அதிகமான திறனை நிறுவியுள்ளது.
- கட்டிட ஒருங்கிணைப்பு சார் ஒளிமின்னழுத்த விளைவு (Building-Integrated Photovoltaics - BIPV) ஆனது சூரிய சக்தி உற்பத்தி தகடுகளை நேரடியாக கட்டிடக்கலைக் கூறுகளில் ஒருங்கிணைப்பதன் மூலம் முழு கட்டிடங்களையும் மின் உற்பத்தி அமைப்புகளாக மாற்ற முடியும்.
- இது மின்சாரத்தை உருவாக்குதல் மற்றும் ஒரு கட்டிடத்தின் கட்டமைப்புப் பகுதியாக செயல்படுதல் போன்ற இரண்டு நோக்கங்களைக் கொண்டுள்ளது.
- இந்த ஒருங்கிணைப்பு ஆனது கட்டிடங்கள் அவற்றின் அழகியல் கூறுகளைப் பேணும் அதே வேளையில் தூய்மையான ஆற்றலை உருவாக்க அனுமதிக்கிறது.
- 2030 ஆம் ஆண்டிற்குள் சுமார் 300 GW சூரிய சக்தித் திறனை நிறுவ இந்தியா இலக்கு நிர்ணயித்துள்ளது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★